இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

**MCOP.No.91/2024 ம.சா.1**

| | |
|---|---|
| பெயர். திரு. பாலகந்தன் | த/பெ. ராஜதுரை |
| கிராமம். நாகூர் | Age: 45 |
| நாள். 14.11.2025 | தொழில். மேலாளர், மீன்கம்பெனி |
| நம்பர். 8270160138 | |

**2025 –**ஆம் ஆண்டு **நவம்பர்** மாதம் **14–**ந்தேதி **வெள்ளிக்கிழமை** Act X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி **திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,** தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் உண்மை என கூறப்பட்டவைதான். எனவே நான் தாக்கல் செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை சாட்சியமாக பாவித்துக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு **மனுதாரர் தாக்கல்** செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலம் **மசா.1ன்** முதல் விசாரணையாக அனுமதிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ. 1 | 19.02.2024 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ. 2 | 17.02.2024 | விபத்து பதிவேட்டு ஆவணம் | நகல் |
| ம.சா.ஆ.3 | 24.07.2023 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ. 4 | 21.02.2024 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.5 | –– | 2ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் உரிமம் | நகல் |
| ம.சா.ஆ.6 | 16.08.2023 | 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்குரிய காப்பீட்டு சான்றிதழ் | நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ. 7 | -- | எனது ஆதார் அடையாள அட்டை (அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல், அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன்.) | நகல் |
| ம.சா.ஆ.8 | -- | எனது வங்கி கணக்கு புத்தகம் (அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல், அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன்.) | நகல் |
| ம.சா.ஆ.9 | 20.02.2024 | நான் சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டதற்காக டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் |
| மசாஆ.10 | -- | எனது வாகனத்தின் பதிவு சான்றிதழ் | நகல் |
| மசாஆ.11 | -- | இந்த விபத்து காயங்களுக்கு எனக்கு ஏற்பட்ட மருத்துவ செலவு ரூ.72,333/-க்கான மருத்துவ ரசீதுகள். | அசல் |
| மசாஆ.12 | -- | எனது ஓட்டுநர் உரிமம் | நகல் |
| மசாஆ.13 | -- | இந்த மனு தாக்கல் செய்த பின்னிட்டு இந்த விபத்து காயங்களுக்கு எனக்கு ஏற்பட்ட மருத்துவ செலவு ரூ.42,850/-க்கான மருத்துவ ரசீதுகள். | அசல் |
| மசாஆ.14 | 14.09.2024 | இந்த மனு தாக்கல் செய்த பின்னிட்டு இந்த விபத்து காயங்களுக்காக மீண்டும் நான் சிகிச்சையில் சேர்ந்து பின்னர் விடுவிக்கப்பட்டதற்காக டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் |
| நீமசாஆ.1 | -- | என்னை நாகப்பட்டினம் மாவட்ட மருத்துவ குழுவால் பரிசோதனை செய்து எனக்கு ஏற்பட்ட காயங்களின் ஊனத்தின் தன்மை 10% பகுதி ஊனம் என்று வழங்கப்பட்ட ஊன மதிப்பீட்டு சான்றிதழ் | அசல் |

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**. இல்லை.

(ஒம்/- G. கிருஷ்ணன்)
தலைமை குற்றவியல் நடுவர்,
நாகப்பட்டினம்.